**செய்தி வெளியீடு எண்: 178** **நாள்: 09.03.2018**

# <u>சென்னை மாவட்டம்</u>

**அறிவிக்கை (Notification)**

**சத்துணவு அமைப்பாளர் காலிப்பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்புவது**

**ந.க. எண். 27468./சஉதி–1(2)/2017** **நாள். 09.03.2018**

சென்னை மாவட்டத்தின் கீழ் இயங்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட பள்ளி சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள <u>205</u> சத்துணவு அமைப்பாளர் காலிப்பணியிடங்களுக்கு ரூ. 7700 – 24200 என்ற ஊதிய விகிதத்தில் நேரடி நியமனம் மூலம் நிரப்பிட பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## <u>இனசுழற்சி வாரியான காலிப்பணியிட விவரம் :–</u>

| வ.எண் | வகுப்பினர் | காலிபணியிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் (அருந்ததியினர்) | 6 |
| 2. | ஆதிதிராவிடர் | 29 |
| 3. | பழங்குடியினர் | 2 |
| 4. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 38 |
| 5. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லீம்கள் | 7 |
| 6. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 50 |
| 7. | பொதுப்பிரிவு | 59 |
| 8. | சிறுபான்மையினர் | 14 |
| | **மொத்தம்** | 205 |

## <u>தகுதிகள் :–</u>

| இனம் | வயது | கல்வித்தகுதி |
|---|---|---|
| **பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்** | குறிப்பிட்ட தேதியில் 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். | 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| **பழங்குடியினர்** | 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். | 8வது தேர்ச்சி/தோல்வி பெற்றிருக்க வேண்டும். |

விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். மேற்படி பணியிடங்கள் அரசு விதிமுறைகளின்படியும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ஆணைக்குட்பட்டும் நிரப்பப்படும். கல்வித் தகுதி, இருப்பிடம், சாதி, விதவை/கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் இதர முன்னுரிமை சான்றுக்கான ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். ஏற்கனவே பணியில் இருப்பவர்கள் சத்துணவு அமைப்பாளர் பதவிக்கான அனைத்து தகுதிகளும் பெற்றிருப்பின் சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டு அலுவலர் மூலமாக விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தின் முன் நகலினை மற்ற விண்ணப்பத்தாரர்களைப்போல் பதிவஞ்சலில் ஒப்புகைச்சீட்டுடன் அனுப்ப வேண்டும்.

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்டு வசிப்பவராக இருத்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் கல்வி, இருப்பிடம், சாதி, விதவை / கணவரால் கைவிடப்பட்டவர் போன்ற சான்றிதழ்களின் நகல்களை இணைத்து பதிவஞ்சலில், **“ஆணையர், சமூக நலம் (ம) சத்துணவுத் திட்ட ஆணையரகம், 2வது தளம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, செ.ன்னை–600 015,** என்ற முகவரிக்கு 20.03.2018 மாலை 5.00 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடுவுக்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தகுதியற்ற விண்ணப்பதாரர்களுக்கு நேர்முக தேர்வுக்கு அழைப்பு கடிதம் அனுப்பப்படமாட்டாது. மேலும் காலிப்பணியிட விவரங்கள், இனசுழற்சி விவரங்கள், விண்ணப்பபடிவம் ஆகியவை dsw@tn.nic.in என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

<u>குறிப்பு :</u> மனுதாரர் ரூ.25/– தபால் தலை ஒட்டிய சுய விலாசத்தை தெளிவாக எழுதிய அஞ்சல் உறையுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**